# **சாண்டா க்ளாரா (Santa Clara) மாகாணத்தில் உங்கள் வாக்களிப்பு உரிமைகளைப் பற்றி தெரிந்துகொள்ளுங்கள்**

கலிஃபோர்னியா 2020 பொதுத் தேர்தல்

ASIAN AMERICANS ADVANCING JUSTICE
ASIAN LAW CAUCUS

அனைத்து பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டை அனுப்புதல்: **அக்டோபர் 5, 2020 அன்று முதல்**
வாக்குச்சீட்டு ட்ராப் பாக்ஸ் தொடக்கத் தேதி: **திங்கட்கிழமை, அக்டோபர் 5, 2020**
பதிவுசெய்தல் கடைசித் தேதி: **திங்கட்கிழமை, அக்டோபர் 19, 2020**
நேரில் சென்று வாக்களிக்கும் மையங்கள்: **சனிக்கிழமை, அக்டோபர் 31, 2020 – செவ்வாய்க்கிழமை, நவம்பர் 3, 2020**

சாண்டா க்ளாரா மாகாண தேர்தல் அலுவலகம்: 866-430-VOTE (8683)

## **வாக்களிக்க தயாராகுதல்**

தேர்தலில் வாக்களிக்க, நீங்கள் முதலில் பதிவு செய்ய வேண்டும்! நீங்கள் பின்வருபவராக இருப்பின் பதிவு செய்யலாம்:

- ஒரு அமெரிக்கக் குடிமகன்;
- கலிஃபோர்னியாவில் வசிப்பவர்;
- தேர்தல் தினத்தன்று 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருக்க வேண்டும்;
- தற்போது சிறைச்சாலையில் இல்லாமல் அல்லது மோசடி தண்டனைக்காக பரோலில் இல்லாமல் இருக்க வேண்டும்; மற்றும்
- நீதிமன்றத்தால் “மனரீதியாகத் திறமையற்றவர்” என்று கண்டறியப்படாமல் இருக்க வேண்டும்.

<u>ஏற்கனவே பதிவு செய்துள்ளீர்களா?</u>
உங்கள் வாக்களிப்பு பதிவுத் தகவலை சோதித்துப் புதுப்பியுங்கள். பின்வரும் செயல்களைச் செய்ய voterstatus.sos.ca.gov ஐப் பயன்படுத்தவும்:

✓ உங்கள் அஞ்சல் முகவரியை உறுதி செய்ய
✓ உங்கள் மாகாண அலுவலகத்திலிருந்து சரியான நேரத்தில் தகவலைப் பெற ஒரு மின்னஞ்சல் முகவரியைச் சேர்க்க அல்லது புதுப்பிக்க
✓ உங்கள் பகுதியில் மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்கள் கிடைக்குமெனில் அவற்றைப் பெறுவதற்கு உங்கள் விருப்ப மொழியைத் தெரிவிப்பதற்கு

மாகாண தேர்தல் அலுவலக இணையதளத்திலுள்ள சாண்டா க்ளாரா வாக்காளரின் செயல் கோரிக்கைப் படிவத்தைப் பயன்படுத்தியும் உங்கள் தகவலை புதுப்பிக்கலாம்.

<u>பதிவு செய்யவேண்டுமா?</u>
**அக்டோபர் 19, திங்கட்கிழமை** முதல், நீங்கள் பின்பருபவற்றில் பதிவு செய்யலாம்:

- registertovote.ca.gov என்ற ஆன்லைன் இணையப்பக்கத்தில் பதிவு செய்யலாம்
- DMV, அஞ்சல் அலுவலகம், நூலகம், அல்லது உங்கள் மாகாண தேர்தல் அலுவலத்தில் பதிவு செய்யலாம்
- ஒரு வாக்காளர் பதிவுப் படிவத்தைக் கோர 1-866-430-VOTE (8683) என்ற எண்ணில் மாகாண தேர்தல் அலுவலத்தை அழைத்துப் பதிவு செய்யலாம், இது அக்டோபர் 19 க்குள் அஞ்சல் மூலமாக பெறுவதற்கு கட்டாயமானதாகும். அஞ்சல்தலை எதுவும் தேவையில்லை!

<u>வாக்காளர் பதிவு கடைசித் தேதியை நான் தவறவிட்டால் என்ன செய்வது?</u>
கவலை வேண்டாம்! நீங்கள் இன்னமும் பதிவு செய்யலாம் மற்றும் தேர்தல் நாள் உட்பட, அதற்குட்பட்ட எந்த தேதியிலும் வாக்களிக்கலாம்.

தேர்வு 1: நீங்கள் உங்கள் மாகாணத்தில் உள்ள மாகாண தேர்தல் அலுவலகத்திற்கோ அல்லது வாக்கு மையத்திற்கோ சென்று, பதிவு செய்வதற்கு “அன்றைய தினமே வாக்காளர் பதிவு செய்தல்” என்பதைப் பயன்படுத்தி, பின்னர் வாக்களிக்கவும். அந்த இடத்திலேயே பூர்த்தி செய்வதற்காக ஒரு வாக்காளர் படிவத்தைப் நீங்கள் பெறுவீர்கள்.

தேர்வு 2: வாக்களிக்க நீங்கள் பதிவு செய்திருக்கவில்லையென்றால், தேர்தல் அலுவலகத்திற்குகோ அல்லது ஒரு வாக்கு மையத்திற்கோ செல்ல முடியாது, மாறாக எவ்வாறு பதிவு செய்வது மற்றும் “தொலைதூர அணுகல் தபால்வழி வாக்களித்தல்” ஐப் பயன்படுத்தி தொலைதூரவாயிலாக வாக்களிப்பது என்பதைக் கேட்க மாகாண தேர்தல் அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும்.

ASIAN AMERICANS ADVANCING JUSTICE
ASIAN LAW CAUCUS

# எவ்வாறு வாக்களிப்பது? உங்களுக்கு விருப்பத்தேர்வுகள் உள்ளன!

## வீட்டிலிருந்தே வாக்களித்தல்

அக்டோபர் 19 க்குள் நீங்கள் பதிவு செய்திருந்தால், நீங்கள் **அஞ்சல்** மூலமாக ஒரு வாக்குச்சீட்டைத் தானாகவே பெறுவீர்கள், அதில் அதை எவ்வாறு பூர்த்தி செய்து திருப்பியளிப்பது என்பதன் மீதான அறிவுறுத்தல்கள் உள்ளடங்கியிருக்கும். நீங்கள் இவ்வாறு செய்யலாம்:

1. அஞ்சல் மூலமாக உங்கள் வாக்குச்சீட்டை அனுப்புதல் – அஞ்சல்தலைத் தேவையில்லை!
   - உங்கள் வாக்குச்சீட்டு கவரில் கையொப்பமிட்டு, தேதியிடுவதை நினைவில் கொள்ளவும்.
   - உங்கள் வாக்குச்சீட்டு தேர்தல் நாளுக்கு முன்னதாக அல்லது அன்றைய தினத்தில் போஸ்ட்-மார்க் செய்யப்படுவதை உறுதி செய்யவும்
2. மாகாணம் முழுவதிலும் அல்லது வாக்கு மையத்தில் வைக்கப்பட்டிருக்கும் பல்வேறு அதிகாரப்பூர்வ வாக்குப்பதிவு “ட்ராப் பாக்ஸ்” களில் ஒன்றில் போடவும் – நினைவில் கொள்க, அஞ்சல்தலை தேவையில்லை! அக்டோபர் 5 தொடங்கி நவம்பர் 3 இரவு 8 மணிவரை திறந்திருக்கக்கூடிய 24-மணிநேர பாதுகாப்பான வாக்குச்சீட்டு ட்ராப் பாக்ஸ்கள் உள்ளன. வாக்கு மையங்களைக் கண்டறியவும் உங்கள் இருப்பிடத்தின் அருகிலுள்ள ட்ராப் பாக்ஸ்களை கண்டறிய eservices.sccgov.org/rov/ ஐப் பார்க்கவும்

## நேரில் சென்று வாக்களித்தல்

நீங்கள் நேரில் சென்று வாக்களிக்க விரும்பினால், அப்படிச் செய்யலாம்! உங்கள் மாகாண தேர்தல் அலுவலகம் மற்றும் வாக்களிப்பு மையங்களில் விரைவாக வாக்களித்தல் மற்றும் அன்றைய தினமே பதிவு செய்தல் போன்றவை உள்ளன.

சாண்டா க்ளாரா மாகாண தேர்தல் அலுவலக முகவரி: The Santa Clara County elections office is at 1555 Berger Drive Building 2, San Jose, CA 95112.
வாக்களிக்கும் நேரம்:
திங்கட்கிழமை-வெள்ளிக்கிழமை அக்டோபர் 5 – நவம்பர் 2 : காலை 8 மணிமுதல் – மாலை 5 மணிவரை
சனிக்கிழமை-ஞாயிற்றுக்கிழமை அக்டோபர் 24 – 25 மற்றும் அக்டோபர் 31 – நவம்பர் 1 : காலை 8 மணிமுதல் – மாலை 5 மணிவரை
நவம்பர் 3 : மதியம் 7 மணிமுதல் – இரவு 8 மணிவரை
அல்லது நீங்கள் மாகாணத்தில் உள்ள எந்த ஒரு வாக்கு மையத்திலும் வாக்களிக்கலாம். வாக்கு மையங்கள் **சனிக்கிழமை, அக்டோபர் 31, 2020 முதல் செவ்வாய்க்கிழமை, நவம்பர் 3, 2020 வரை** திறந்திருக்கும். வாக்கு மையத்தின் இடங்கள் மற்றும் பணிநேரங்கள் பற்றிய தகவல்களை அஞ்சல் மூலமாக நீங்கள் பெறுவீர்கள், அல்லது நீங்கள் உங்கள் இருப்பிடத்தின் அருகில் இருக்கும் வாக்கு மையங்களைக் கண்டறிய eservices.sccgov.org/rov/

தேர்தல் தினத்தன்று, வாக்கு மையங்கள் **காலை 7 மணிமுதல் இரவு 8 மணிவரை** திறந்திருக்கும். *நீங்கள் இரவு 8 மணிக்கு வரிசையிலிருந்தால், உங்களால் வாக்களிக்க முடியும்.*

வாக்குச்சீட்டைப் பெறுவதற்கு ஏதேனும் வாக்கு மையத்திற்குச் சென்று, உங்கள் பெயர் மற்றும் முகவரியை அவர்களிடம் அளியுங்கள். நீங்கள் ஆங்கிலம் தவிர்த்த இதர மொழியில் வாக்களிக்க விரும்பினால், அந்த மொழிக்கான பொருட்கள் ஏதேனும் உள்ளதா என்று கேட்கவும் அல்லது வாக்கு மையங்களில் உள்ள பணியாளர்கள் எவரும் அந்த மொழியில் பேசுவார்களா என்று கேட்கவும்.

<u>பொதுச் சுகாதார பாதுகாப்புகள் இருக்குமா?</u>
ஆம். வாக்கு மைய ஊழியர் முகக்கவசங்களை அணிந்துகொண்டு, பொதுச் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து வாக்கு மையங்களை அமைப்பார். முகத்தில் முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் உள்ளிட்ட மாநில மற்றும் உள்ளூர் பொதுச் சுகாதார தேவைப்பாடுகளுக்கும் வாக்காளர்கள் இணங்க வேண்டும்.

<u>வாக்களிக்கும்போது நான் எனது அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டுமா?</u>
பெரும்பாலான அனைத்து நிகழ்வுகளிலும், தேவையில்லை. நீங்கள் முதல்முறையாக வாக்களிப்பதாக இருந்தால் மற்றும் வாக்களிக்கப் பதிவு செய்யும்போது உங்கள் ஓட்டுநர் உரிமம் எண், மாநில அடையாள எண், OR சமூகப் பாதுகாப்பு எண்ணை சேர்க்கவில்லையென்றால் மட்டுமே ஆவணங்களைக் காண்பிக்க வேண்டியிருக்கும். அந்த நிலையில், பல ஆவணங்களை பயன்படுத்தலாம். உங்களுக்குச் சந்தேகம் ஏதேனும் இருந்தால் முன்னதாகவே உங்கள் தேர்தல் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

<u>வாக்களிக்கும்போது எனக்கு உதவ, எவரையேனும் என்னுடன் அழைத்து வரலாமா?</u>
ஆம். நேரில் சென்று வாக்களிக்கும்போது உங்களுக்கு உதவுவதற்காக இரண்டு நபர்கள் வரை உடன் அழைத்துவர கலிஃபோர்னியா சட்டம் அனுமதிக்கிறது, அவர்கள் உங்கள் ஊழியர் அல்லது உங்கள் யூனியனில் ஒரு நபராக இருக்காத வரை. உங்கள் குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரை உடன் அழைத்துவாருங்கள்.

## வாக்களிக்கும்போது ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டால் என்ன செய்வது?

தளர வேண்டாம்! **அன்றைய-தினமே வாக்காளர் பதிவில்** மறுபதிவு செய்யும்படி கோரிக்கை விடுத்து வாக்களிக்கவும். ஏதேனும் காரணத்தினால் உங்களால் அவ்வாறு செய்ய இயலவில்லையென்றால், **ஒரு தற்காலிக வாக்குப்பதிவைக் கோருங்கள்**, இது தேர்தல் அதிகாரிகள் உங்கள் தகுதியை உறுதி செய்தபிறகு, தேர்தல் தினத்திற்குப் பிறகும் கணக்கிடப்படும் ஒரு வாக்குப்பதிவாகும்.

அல்லது, ஒரு தேர்தல் தின வாக்காளர் பாதுகாப்பு எண்ணிற்கு அழைப்பு விடுக்கவும்:

- ஆங்கிலத்தில் உதவியைப் பெறுவதற்கு 866-OUR-VOTE (866-687-8683) என்ற எண்ணில் அழைக்கவும்.
- ஆங்கிலம், மாண்டரின், கண்டோனீஸ், வியட்னாமீஸ், கொரியன், பெங்காலி, உருது, ஹிந்தி மற்றும் டகளாக் மொழிகளில் உதவியைப் பெறுவதற்கு 888-API-VOTE (888-274-8683) என்ற எண்ணில் அழைக்கவும்.
- NALEO கல்வி நிதியின் (NALEO Educational Fund) இலவச இருமொழிகள் ஆங்கிலம்-ஸ்பானிஷ் உதவிக்கு 888-Ve-Y-Vota (888-839-8682) என்ற எண்ணை அழைக்கவும்.

<u>ஆங்கிலம் தவிர்த்த இதர மொழிகளில் என்னால் வாக்களிக்க இயலுமா?</u>

ஆம்! நீங்கள் கெமர், சைனீஸ், டகளாக், ஹிந்தி, ஜப்பானிய மொழி, கொரியன், ஸ்பானிஷ் அல்லது வியட்னாமீஸ் போன்ற மொழிகளில் வாக்களிக்க விரும்பினால், அதற்குரிய மொழிபெயர்க்கப்பட்ட வாக்குச்சீட்டுகள் கிடைக்கும். நீங்கள் நேபாள மொழி, குஜராத்தி, பஞ்சாபி, தமிழ் மற்றும் தெலுங்கு மொழி பேசுபவராக இருந்தால், மொழிபெயர்க்கப்பட்ட "தொலைநகல்" வாக்குச்சீட்டுகள் கிடைக்கப்பெறலாம்.

நீங்கள் வீட்டிலிருந்து வாக்களிக்கிறீர்கள் என்றால், மொழிபெயர்க்கப்பட்ட வாக்குச்சீட்டு அல்லது இதர பொருட்களைப் பெறுவதற்கு, 866-430-VOTE (8683) என்ற எண்ணில் தேர்தல் அலுவலகத்திற்கு அழைப்பு விடுத்து, ஒரு மொழிபெயர்க்கப்பட்ட வாக்குச்சீட்டை அனுப்புமாறு கேட்கவும்.

நீங்கள் நேரில் சென்று வாக்களிக்கிறீர்கள் என்றால், வாக்கு மைய ஊழியர்களிடம் மொழிபெயர்க்கப்பட்ட வாக்குச்சீட்டுகளைக் கேட்கவும். அங்கு உங்களுக்கு உதவுவதற்காக இருமொழி வாக்காள ஊழியர்கள் இருக்கக்கூடும்.

வாக்களிப்பில் மொழி அணுகல் குறித்த அதிக விளக்கத்துடன் கூடிய ஒரு கையேட்டை இதில் பார்க்கலாம்: [advancingjustice-alc.org/know-your-voting-rights/](advancingjustice-alc.org/know-your-voting-rights/).

Asian Americans Advancing Justice - Asian Law Caucus
55 Columbus Avenue, San Francisco, CA 94111
Telephone (415) 896-1701
www.advancingjustice-alc.org